கொள்ளிடத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க வேண்டும்!

# 'திராவிட மாடல்' அரசின் நிதிநிலை அறிக்கை மக்கள் போற்றும் அறிக்கை!

## சட்டப்பேரவையில் – சீர்காழி மு.பன்னீர்செல்வம் பேச்சு!

**சென்னை, மார்ச் 21 – சட்டப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் சீர்காழி தொகுதி உறுப்பினர் மு.பன்னீர்செல்வம் பேசுகையில், திராவிட மாடல் அரசின் நிதிநிலை அறிக்கை மக்கள் போற்றும் நிதி நிலை அறிக்கை என்று குறிப்பிட்டார்.**

பேரவையில் சீர்காழி தொகுதி உறுப்பினர் மு.பன்னீர்செல்வம் பேசியதாவது:-

2025-2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்திலும், உழவர்நலத் துறை விவாதத்திலும் கலந்து கொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், எங்களது மாவட்ட பொறுப்பு அமைச்சர், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர், அரசு தலைமைக் கொறடா மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்து எனது உரையைத் துவங்குகின்றேன்.

### சீர்காழி தொகுதிக்கு திட்டங்கள்!

2021 ஆம் ஆண்டு மிகக் கடுமையான கொரோனா பெருந்தொற்று காலத்தில் கூட நமது அரசு பொறுப்பேற்ற காலந்தொட்டு இன்றுவரை எனது சீர்காழி தொகுதிக்கு நமது திராவிட மாடல் அரசு செய்து கொடுத்த திட்டங்களை நன்றியோடு இம்மன்றத்தில் பதியவைக்கவிரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணின் மைந்தர் நூலக தந்தை டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் நினைவாக புதிய நூலகத்திற்கு ரூ.1.32 கோடி, வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்ட ரூ.9 கோடி, சீர்காழி அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள், ஆய்வகம், கண்சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சை மையம், அதுபோல் வைத்தீஸ்வரன் கோவில் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.25.10 கோடி, திருவெண்காட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.1 கோடியே 98 இலட்சம், சீர்காழியில் இசை பள்ளி அமைக்க ரூ.1 கோடியே 10 இலட்சம், புத்தூர் சீனிவாசா சுப்புராயா அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய workshop மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் அமைக்க ரூ.10 கோடியே 50 இலட்சம்.

### திருமுல்லைவாசலில் மீன்பிடி துறைமுகம்!

புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் புதிய ஆய்வகம் ஒன்றும், கூடுதல் வகுப்பறை கட்டடங்களுக்கு ரூ. 6 கோடியே 40 இலட்சம், சீர்காழி நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்திற்கு சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்திட ரூ.15 கோடி நிதி, சீர்காழி மற்றும் கொள்ளிடத்தில் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்ட ரூ. 2 கோடியே 47 இலட்சம், சீர்காழி புளிச்சக்காட்டில் மனவளர்ச்சி குன்றியோர் பாதுகாப்பு விடுதி அமைக்க ரூ. 6 கோடி, திருவெண்காட்டில் புதிய பயணியர் சுற்றுலா மாளிகை அமைக்க ரூ. 1 கோடி, வைத்தீஸ்வரன் கோவில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் திருமுல்லைவாசல், ஆச்சாள்புரம், புதுப்பட்டினம், துளசேந்திரபுரம், நாங்கூர் ஆகிய மேல்நிலைப் பள்ளிகளுக்கும், திட்டுப்படுகை உயர்நிலைப்பள்ளி என 58 புதிய வகுப்பறை கட்டடங்கள் கட்ட ரூ. 13 கோடி, இந்து அறநிலையத் துறைமூலம் திருவெண்காடு, திருப்பங்கூர் ஆகிய இடங்களில் புதிய திருமண மண்டபங்கள் அமைக்க ரூ. 7 கோடியே 55 இலட்சம், நாதல்படுகை மற்றும் முதலைமேடு திட்டு ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் புயல் பாதுகாப்பு மையம் கட்ட தலா 8 கோடி என 16 கோடி, தென்னாம்பட்டினம் மற்றும் பெருந்தோட்டம் கிராமங்களில் கடைமடை நீர் ஒழுங்கி அமைக்க ரூ. 39 கோடி, திருநகர் உப்பனாற்றில் தடுப்பணை கட்ட ரூ.30 கோடி, அளக்குடி கிராமத்தில் கொள்ளிடம் கரை உடைப்பை தடுக்க தடுப்பு சுவர் அமைக்க ரூ.23 கோடி, திருமுல்லைவாசல் மீன்பிடி துறைமுகம் விரிவாக்கம் செய்ய ரூ.18 கோடி, பழையார் மற்றும் கொடியம்பாளையத்தில் படகு தங்கும் தளம் அமைக்க ரூ. 30 கோடியே 50 இலட்சம், கொட்டாயமேட்டில் பக்கிங்காம் சேனலில் பாலம் கட்ட ரூ. 2 கோடியே 50 இலட்சம், எடமணலில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் 25 கிடங்குகள் அமைக்க ரூ. 25 கோடி, நாங்கூர், குன்னம், பெருமங்களம், பெருந்தோட்டம் என நான்கு புதிய நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் அமைக்க ரூ. 2 கோடியே 28 இலட்சம் மற்றும் நெடுஞ்சாலைத் துறை, முதலமைச்சர் கிராம சாலை திட்டம் என பல திட்டங்களுக்கு மட்டும் 400 கோடி வரையிலான திட்டங்களுக்கு எனது சீர்காழி தொகுதிக்கு முன்னுரிமை அளித்த முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அதுபோல் மேற்படி திட்டங்களுக்கு துணை நின்ற அமைச்சர் பெருமக்களுக்கும், இத்தருணத்தில் தொகுதி மக்களின் சார்பாக கோடானகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை மக்கள் போற்றும் அறிக்கையாக உள்ளது. பல்வேறு நிதி பற்றாக்குறையிலும், ஏன் தமிழ்நாட்டை வஞ்சிக்கின்ற ஒன்றிய அரசின் ஒத்துழையாமையிலும் மக்களுக்கான நிதிநிலை அறிக்கையாக இருக்கின்றது, நமது தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை. அதைப் பற்றி பேசுவதற்கு எங்களுக்கு நேரம் போதாது என்றாலும் மக்களுக்கான அரசு, மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்ட நிதிநிலை அறிக்கை. அதுபோல் வேளாண் நிதிநிலை அறிக்கை, 66 திட்டங்களை முக்கிய அம்சங்களாக தந்திருக்கிறது. அதுதான் திராவிட மாடல் அரசின் பெருமை.

### மகளிர் நலன் காக்கும் திட்டங்கள்!

குறிப்பாக, நிதிநிலை அறிக்கையில், மகளிர் நலன் காக்க சுயஉதவி குழுக்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தோழி விடுதி என பெண்களுக்கென தேவைகளை அறிந்து செயல்படுத்தப்படும் திட்டம், குறிப்பாக, அடுத்த ஐந்தாண்டுக்குள் ஒரு இலட்சம் மகளிரை தொழில் முனைவோராக உயர்த்திடும் உன்னத திட்டம். பெண்கள் பெயரில் பத்திரப்பதிவு செய்தால், பதிவு கட்டணத்தில் ஒரு சதவீதம் குறைக்கப்படும் திட்டம் பெண்களிடையே மிகுந்த வரவேற்பினை அளிக்கும் திட்டமாக உள்ளது. முதல்வரின் முகவரி துறையின்மூலம் மக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் செயல்பாடுகளில் இதுவரை 89 இலட்சம் 58 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்பது தமிழக அரசியல் வரலாற்றில் மக்கள் முதல்வர் தளபதி அவர்களின் ஆட்சியில்தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

### கிராம சாலைத் திட்டங்கள்!

அதுபோல் பொதுமக்கள் அரசு அலுவலர்களை தேடிச் செல்லும் நிலையை மாற்றி மக்கள் வசிக்கும் இருப்பிடத்திற்கு சென்று தீர்வு காணும் திட்டமாக மக்களுடன் முதல்வர் திட்டம், அதில் இதுவரை 21 இலட்சத்து 86 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை பார்க்கின்றபோது திராவிட மாடல் அரசின் சாதனையாக விளங்குகின்றது. குடிசையில்லா தமிழ்நாடு அமைத்திட வேண்டும் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எண்ணத்தை பூர்த்திசெய்யும் திட்டம்மூலம் அடுத்த ஐந்தாண்டுகளில் 8 இலட்சம் வீடுகள் கட்ட திட்டமிட்டு கடந்த ஆண்டில் 1 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டு வரும் நிலையில் இவ்வாண்டில் ரூ.3,500 கோடி நிதி ஒதுக்கியுள்ளமைக்கு ஏழையெளியவர்கள் மிகுந்த எதிர்பார்ப்போடு உள்ளார்கள்.

அதுபோல் கடைகோடி குக்கிராமங்களை சென்றடையும் வகையிலான தரமான சாலைகளை உருவாக்க வேண்டுமென முதல்வரின் கிராம சாலைகள் திட்டம், இவ்வாண்டில் ரூ.2,200 கோடியில் 6,100 கி.மீ. சாலைகள் அமைக்கும் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் 1,087 கோடியில் 2,329 ஊராட்சிகளில் பணிகள் மேற்கொள்ள இருப்பது பாராட்டுக்குரியது.

இவ்வாறு ஊரக வளர்ச்சித் துறைக்கு 29 ஆயிரத்து 465 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை கண்டு வியந்து பார்க்கின்றேன். குறிப்பாக, மக்கள் நலன் அறிந்து செயல்படும் அரசு என்பதற்கு உதாரணம்.



2001 ஆம் ஆண்டுக்கு முன்னதாகக் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகளை சீரமைக்க எவ்வித நிதித்திட்டங்களும் இல்லாத நிலையில் இவ்வாண்டில் 25,000 வீடுகளை புதியதாக கட்டுவதற்கு, 600 கோடி நிதி ஒதுக்கியமைப்பு இத்தருணத்தில் மக்கள் சார்பாக, மனதார பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். பள்ளிக் கல்வித் துறையில் எண்ணற்ற திட்டங்கள், திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் பள்ளி கல்வித் துறைக்கு முக்கியத்துவம் அளித்து, பேராசிரியர் பெருந்தகை முன்னாள் கல்வி அமைச்சர் அன்பழகனார் பெயரில் மேம்பாடு திட்டம் உருவாக்கி பழைய வகுப்பறை கட்டடங்களை அகற்றி, புதிய கட்டடங்கள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதிக்கென கடந்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்திய திட்டங்களைப் போல் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் உள்கட்டமைப்புக்கு ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை பார்க்கும்போது, இன்றைய குழந்தைகள் நாளைய தலைமுறை உருவாக்கக் கூடியவர்கள் எனக் கருதி திராவிட மாடல் அரசு பள்ளிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

அதுமட்டுமல்லாமல் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நகர்ப் பகுதி, ஊரகப் பகுதி அரசுப் பள்ளிகள் மட்டுமல்லாமல், அரசு உதவிபெறும் பள்ளிக் குழந்தைகளும் பயன்பெறும் திட்டமாக உள்ளது. இதனை பல்வேறு மாநிலங்களிலும் பின்பற்றி வருவதை பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வெளிநாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள்கூட காலை உணவுத் திட்டத்தை நம்மைப் பார்த்துச் செயல்படுத்துவதைப் பார்க்கும்போது, அனைத்திற்கும் வழிகாட்டியாக தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டுள்ளார்கள் என்பது பெருமையாக உள்ளது.

மாணவர்களின் நலன் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்திவரும் நமது அரசினை வஞ்சிக்கின்ற வகையில், பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய நிதியைத் தர மறுத்து, மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் நிதி கொடுப்போம் என மிரட்டும் ஒன்றிய அரசுக்குப் பணியாமல், இருமொழிக் கொள்கையை விட்டுத் தரமாட்டோம் என உறுதியாக நிற்கும் திராவிட மாடல் அரசின் வழிகாட்டி முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் என்றைக்குமே துணை நிற்பார்கள் என தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில், இதனால் கல்வியின் தரம் குறைந்துவிடக் கூடாது என மாநில அரசின் சொந்த நிதியினை அளித்து வருவதும் மிகுந்த பாராட்டுக்குரிய செயலாகும். அந்த வகையில், பள்ளிக் கல்வித் துறைக்கு 46,767 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது வரவேற்கத்தக்கதும் பாராட்டத்தக்கது மான நடவடிக்கையாகும்.

### உயர் கல்வித் துறையில் திட்டங்கள்!

அதேபோன்று, வாடகைக் கட்டடத்தில் இயங்கும் 500 குழந்தைகள் நல மையங்களுக்கு புதிய கட்டடங்கள் அமைக்க 3,676 கோடி ரூபாயும், குறிப்பாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு 8,597 கோடி ரூபாயும் இந்த நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது மிகுந்த வரவேற்கத்தக்க செயல்பாடாகும்.

அடுத்து, உயர் கல்வித் துறையில் பல புதிய திட்டங்களை உருவாக்கி, உயர் கல்வி மேம்பட திட்டமிட்டுள்ளதும், குறிப்பாக பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திறன்மிகு வகுப்பறைகள், மாணவர் விடுதிகள் போன்ற உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட 300 கோடி ரூபாயும், 7.5 சதவிகித உள் ஒதுக்கீடு 41,038 மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்று நடத்திட 550 கோடி ரூபாயும் என உயர் கல்வித் துறைக்கு 8,494 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித்தரும், நான் முதல்வன் திட்டம், அரசுப் பள்ளி மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு உருவாக்கிய தமிழ் புதல்வன் திட்டத்தினைச் செயல்படுத்திட 10 கோடி ரூபாய், 1 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு வங்கிமூலம் 2,500 கோடி ரூபாய் வரை கடன் வசதி ஏற்படுத்தித் தர அரசு உதவுவது என மிக முக்கியப் பணிகளுக்கு அரசு தனிக் கவனம் செலுத்தியுள்ளது பாராட்டத்தக்கது.

### வேளாண் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை!

வேளாண்மைத் துறைக்கான தனி நிதிநிலை அறிக்கையை தமிழகத்தில் முதன்முதலில் துவங்கிய பெருமை நமது அரசுக்கே உண்டு. அந்த வகையில், இந்த ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் 'முதல்வர் மருந்தகம்' என்னும் திட்டத்தைப் போன்று, 1,000 உழவர் நல சேவை மையங்கள் துவங்கிட 42 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதும், நெல் சாகுபடி பரப்பை அதிகரித்திட 58 கோடி ரூபாயும், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் 142 கோடி ரூபாயில் தொடர்ந்திடவும், ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு 60 முதல் 70 சதவிகிதம் வரை மானியம் வழங்கிடவும், 17 ஆயிரம் உழவர்களுக்கு 215.80 கோடி ரூபாயில் வேளாண் இயந்திரங்கள் வழங்கிட திட்டமிட்டுள்ளதும், C மற்றும் D வாய்க்கால்களை 2,925 கி.மீ. அளவிற்கு தூர் வாரிட நிதி ஒதுக்கியமைக்கும், 1,000 உழவர்களுக்கு புதிய மின் மோட்டார்கள் வழங்கிட, பழைய மின் மோட்டார்களை பழுது நீக்கிட 1.5 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதும், உழவர்களின் குறுகிய காலக் கடன் தேவைகளுக்கு 3,000 கோடி ரூபாய் மூலதன கடனும், டெல்டா மாவட்டங்களில் 22 நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும்பல்வேறுதிட்டங்களைச் செயல்படுத்த 480 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதும், காவிரி டெல்டா பகுதியில் 6,179.6 கி.மீ. நீளத்திற்கு ஆறுகள், வாய்க்கால்களைத் தூர் வார 120 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதும் என பல்வேறு மிக முக்கிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கித் தந்துள்ள வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்

அடுத்து, மானாவாரி நிலங்களில் கோடை உழவுக்கு மானியம். தமிழ்நாட்டில் 56 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் பருவ மழையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. மேற்கண்ட நிலங்களில் பூச்சி நோய் கட்டுப்பாடு, மழைநீர் சேகரிப்பு மேற்கொண்டு உயர் மகசூல் பெற்றிட 3 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் கோடை உழவு செய்திட உழவு மானியமாக 24 கோடி ரூபாய் இந்தாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கோடை உழவுக்கென மட்டும் இத்திட்டம் முதன்முறையாக இந்தாண்டு நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்து, மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம். விளிம்புநிலை மக்களும், முக்கியமாக மலைவாழ் மக்கள் தங்கள் உழவுத் தொழிலில் ஏற்றம் கண்டிட புதுமையான திட்டமாக மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம் இந்தாண்டு 22 கோடியே 80 இலட்சம் ஒதுக்கீட்டில் 63 ஆயிரம் மலைவாழ் உழவர்கள் பயனடையும் வகையில் இந்தாண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் குறு தானிய சாகுபடி, இடு பொருள் விநியோகம், காய்கறி பயிர்கள் பரப்பு விரிவாக்கம், மதிப்புக் கூட்டுதல், நுண்ணீர்ப் பாசனம் போன்ற திட்டங்களினால் இம்மக்களின் வாழ்வாதாரம் சிறப்பாக மேம்படும். இத்திட்டம் 20 மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளில் மலைவாழ் மக்கள் மேம்படுவதற்காக இந்தாண்டு செயல்படுத்தப்படவுள்ளது.

### கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்:

தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில் வேளாண்மை தன்னிறைவு பெறும் வகையில் நான்கு ஆண்டுகளில் 10,187 கிராம ஊராட்சிகளில் தன்னிறைவு பெற்ற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மீதமுள்ள (மணியடிக்கப்பெற்றது) 2,338 கிராம ஊராட்சிகளில், சுமார் 9 இலட்சத்து 36 ஆயிரம் உழவர்கள் பயனடையும் வகையில், ரூ.269 கோடியே 50 இலட்சம் மாநில நிதி ஒதுக்கீட்டில் இந்தாண்டு செயல்படுத்தப்படவுள்ளது.

அதேபோன்று, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகளை பெறும் இளைஞர்களை ஊக்குவிப்பதிலும், அதன்மூலம் பல போட்டிகளில் தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் விளையாட்டு வீரர்கள் பதக்கங்களை பெற்று வருவது பெருமையாகும். உலக அரங்குகளில் சதுரங்க விளையாட்டு தலைநகரமாக தமிழ்நாடு விளங்குவது பெருமையாகும். இத்துறையை மேம்படுத்திட 572 கோடி ஒதுக்கி உள்ளது. வரவேற்கத்தக்கது.

### தொழிலாளர் நலத் துறை!

தொழிலாளர் நலத் துறைமூலம் பல்வேறு திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்கள் சார்ந்த நலனை கருத்திற்கொண்டு அத்துறைக்கு 1,975 கோடி நிதி ஒதுக்கி உள்ளதும், மருத்துவத் துறையில் 'இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48' என்கிற சிறப்பு திட்டங்களை செயலாக்கியது, 'முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி', முதலமைச்சரின் 'விரிவான காப்பீட்டுத் திட்டம்', 1997 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்திய 'சிற்றுந்து திட்டம்' நாட்டில் பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது நகர்ப்புறங்களை ஒட்டிய ஊரகப் பகுதிகளிலும் போக்குவரத்து சேவையை வழங்கிடும் வகையில் மாற்றியமைக்கப்பட்ட விதிமுறைகளுடன் சுமார் 2,000 வழித்தடங்களில் சிற்றுந்து திட்டம் விரிவுபடுத்தப்பட்டுவரும் நேரத்தில், அரசே இந்த சிற்றுந்து திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை தொழில் முனைவோராக உயர்த்துவதற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முதலமைச்சரின் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் (CM ARISE) செயல்படுத்தப்படுகிறது. வரும் ஆண்டில் 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதை இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுகிறேன்.

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின்கீழ் 20252026 ஆம் நிதி ஆண்டில் 65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பது முதலமைச்சர் அவர்கள் ஆதி திராவிடர் மக்கள்மீது கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது. இந்த அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தை சேர்ந்த பெண் விவசாய தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக உயர்த்த "நன்னிலம்" மகளிர் நில உடைமை திட்டத்தை அறிமுகப்படுத்தி இருப்பது பெண்களுக்கு பொருளாதார பாதுகாப்பையும், உயர்வையும் உறுதி செய்து, வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நீதியின் பிறப்பிடமான தமிழ்நாட்டில் தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன், சாதிவாரியான கணக்கெடுப்பையும் எடுத்து ஒன்றிய அரசு நடத்திட வேண்டும் என பல ஆண்டுகளாக தொடர்ந்து வலியுறுத்தியபோதும், ஒன்றிய அரசு செவிசாய்க்காமல் இருந்து வருவது, நம் மக்களுக்கு பெரும் துரோகம் செய்து வருகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வகை உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கிட சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்த இருப்பது பெரும் பாராட்டுக்குரியது என்று கூறிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல, என்னுடைய சீர்காழி தொகுதி குறித்து நிறைய கோரிக்கைகள் இருக்கின்றன. அதில் ஒன்றிரண்டை மட்டும் சொல்லிவிட்டு மீதியை என்னுடைய சட்டமன்ற உரையில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலிலே, சீர்காழி நகராட்சிக்கு புதிய பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த வேண்டும். சீர்காழி தொகுதி அளக்குடி ஊராட்சிக்கும், கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதி திருக்கழிப்பாலைக்கும் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகாமல் தடுப்பணை கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

### தொகுதிக் கோரிக்கைகள்:

கொள்ளிடத்தில் இரயில்வே மேம்பாலம், சீர்காழி நகரத்தில் இரயில்வே மேம்பாலம், வைத்தீஸ்வரன்கோவில் இரயில்வே மேம்பாலம் என மூன்று இரயில்வே கடவு மேம்பாலங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும்.

சீர்காழி நெடுஞ்சாலைத் துறையின் அலுவலகத்தில், புதிய பயணியர் மாளிகை கட்டிக் கொடுக்க வேண்டும். சீர்காழி நகராட்சி மேல்நிலைப்பள்ளிக்கு கட்டடம் கட்டவும், விளையாட்டு மைதானத்திற்கு 3 ஏக்கர் இடத்தை தருமை ஆதினத்திடமிருந்து அரசு பெற்றுத் தர வேண்டும்.

இந்து சமய அறநிலையத் துறைமூலம் திருவெண்காட்டில் பெண்கள் கல்லூரி ஒன்றை துவங்கிட வேண்டும்.

மடவாமேடு மற்றும் தொடுவாய் மீனவர் கிராமத்திற்கு கருங்கல் தடுப்புச்சுவர் அமைத்து தர வேண்டும்.

கொள்ளிடம் ஒன்றியமாக உள்ள 42 ஊராட்சிகளைக் கொண்டு, கொள்ளிடத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டத்தை உருவாக்கித் தர வேண்டும்.

புத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இளமறிவியல் இயற்பியல் (B.Sc. Physics), இளமறிவியல் வேதியியல் (B.Sc. Chemistry), இளம் வணிகவியல் (Tamil Medium), இளம் அறிவியல் Artificial Intelligence) முதுகலை வணிகவியல் (M.Com), தமிழ் முனைவர் பட்ட ஆராய்ச்சி (Ph.D. Tamil) என புதிய பாடப் பிரிவுகளை துவங்கிட வேண்டும்.

சீர்காழி தொகுதியில் திருமுல்லைவாசல் போன்ற பெரிய ஊராட்சிகளை பிரித்து, புதிய ஊராட்சிகளை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு மு.பன்னீர்செல்வம் பேசினார்.

---

நீதிமன்றத்தின் உத்தரவுப்படி சேலம் மத்திய மாவட்டத்தில்

# பொது இடங்களில் உள்ள கழகக் கொடிக் கம்பங்களை அகற்றிடுவீர்!

## கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் வேண்டுகோள்!



சேலம், மார்ச் 21 - சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைக்கு சொந்தமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகள், இயக்கங்கள் அனைத்து கொடி கம்பங்களையும் அகற்றிட வேண்டுமென சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து தலைமைக் கழக அறிவிப்பின்படி சேலம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், தத்தமது பகுதிகளில் உள்ள தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைக்குச் சொந்தமான இடங்களிலும் பொது இடங்களிலும் வைத்துள்ள கழகக் கொடிக் கம்பங்களை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அளித்த தீர்ப்பினை ஏற்று அகற்றிட வேண்டும்.

அவ்வாறு அகற்றப்பட்ட கழகக் கொடிக் கம்பங்களின் விவரங்களை மாவட்டக் கழகத்திற்கு 28.03.2025 அன்றுக்குள் தெரியபடுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சேலம் இரா.இராஜேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

'திராவிடியன் ஸ்டாக்' பதிப்பகம் வெளியிடும்

# 'கலைஞரின் திருக்குறள் உரை' நூல் வெளியீட்டு விழா!

## அமைச்சர் கோ.வி.செழியன் - நா.எழிலன் எம்.எல்.ஏ. - ஆழி செந்தில்நாதன் சிறப்புரை!

சென்னை, மார்ச் 21 - 'திராவிடியன் ஸ்டாக்' பதிப்பகம் சார்பில் 'கலைஞரின் திருக்குறள் உரை' நூல் வெளியீட்டு விழா சென்னை அன்பகத்தில் நடைபெறுகிறது.

சென்னை, அன்பகத்தில் 'திராவிடியன் ஸ்டாக்' பதிப்பகம் சார்பில் 'கலைஞரின் திருக்குறள் உரை' நூல் வெளியீட்டு விழா நாளை (22.3.2025 - சனிக்கிழமை) மாலை 5.30 மணிக்கு நடைபெறுகிறது.

இந்நூலை உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் வெளியிட்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

மேலும் மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., மூத்த பத்திரிகையாளர் ஆழி செந்தில் நாதன் ஆகியோரும் இதில் உரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் யாழ் திலீபன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மேலும் ஊடகவியலாளர்கள் மைனர், மில்டன், கரிகாலன் மற்றும் இந்திரகுமார் தேரடி ஆகியோர் இதில் கலந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சித் தொகுப்பை ப்ரியதர்ஷினி கோபால் வழங்க, லஷிதா கௌதம் நன்றியுரை ஆற்றுகிறார்.

---



அரியலூர் மாவட்டம் மேலப்பழுவூர் கோல்டன் கேட்ஸ் மழலையர் பள்ளியில் நடைபெற்ற திருக்குறள் முற்றோதல் விழா என்ற தலைப்பில் 133 குழந்தைகள் 133 நிமிடங்களில் 133 அதிகாரங்களில் உள்ள திருக்குறள்களை சொல்லி உலகசாதனைப் படைத்ததை முன்னிட்டு அந்த மழலைகளைப் பாராட்டும் வகையில் தமிழ்நாட்டில் 133 நிமிடங்களில், 133 மழலைகள் 1,330 குறள்களைச் சொன்னது இதுவே முதல்முறையாகும். இதனை உலக சாதனையாக அங்கீகரித்து சென்னையில் உள்ள விருக்ஷா குளோபல் ஆப் வேர்ல்ட் ரெக்கார்ட் நிறுவனம் சார்பில் உலக சாதனைக்கான சான்றிதழையும் பட்டத்தையும், கேடயத்தையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மற்றும் கவிச்சுடர் கவிதைப்பித்தன் வழங்கி வாழ்த்தினார்கள். உடன் பள்ளியின் தாளாளர் பிரகதா இராஜ்குமார், நெறியாளர் பிரியநாடராஜன் மற்றும் ஆசிரிய பெருமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.